# யாழ்ப்பாணத்தின் நகை வேலைப்பாடுகளும் தட்டார் சமூகமும்: யாழ்ப்பாண நாச்சிமார் கோவிலடி தட்டார் சமூகத்தை மையப்படுத்திய ஆய்வு

இ. சப்னா[113]

Correspondence: safnaiqbal11@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நாகரீகங்களின் தோற்றம்,வளர்ச்சியில் குறித்த பிராந்தியத்தின் புவியியல் அமைவிடம், மற்றும் பொருளாதாரச் செல்வாக்கு என்பன முக்கியம் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அதன் சமூக அடுக்குகள் சாதியை மையப்படுத்தியதாகவே காணப்பட்டது. தன்தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன் எனும் அடிப்படையில் இம்மக்களது வாழ்வியல் நடவடிக்கைகளும் அமைந்தன. அவ்வகையே யாழ்ப்பாண மக்களிடத்தே நகைகள் ஓர் சமூக அடையாளமாகவும் சடங்கு சார் நடைமுறைகளுடனும் தொடர்புபட்ட ஒன்றாக விளங்கியது. ஆய்வில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி 1900 களின் பின் தட்டார்களின் சமூகநிலை மாற்றங்கள், வடிவமைப்பு ரீதியான தனித்துவங்கள், என்பவற்றில் ஏற்பட்ட நவீனமயமாதலின் தாக்கம் அவர்களது வரலாறு பற்றிய தேடலை அடையாளப்படுத்த வழிகோலியது. விஸ்வகர்ம வழித்தோன்றலில் தட்டார்களும் முக்கியம் பெறுகின்றனர். இவர்கள் விஸ்வஜ்னா என்ற பிரிப்புள் அடங்கும் நபர்களாக பொன் மற்றும் வெள்ளி கொண்டு அணிகலன்களை உற்பத்தி செய்யும் கைவினைஞர்களாகவும் காணப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் பல பிராந்தியங்களில் குறிப்பாக பருத்தித்துறை, சாவகச்சேரி, சங்கானை, வண்ணாப்பண்ணை, கொக்குவில், கல்வியங்காடு, கட்டப்பிராய், அச்சுவேலி, தெல்லிப்பளை ஆகிய இடங்களில் நகைஉற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் அழகுக்காக மட்டுமன்றி சமய சடங்குகள், விஸ்வகர்ம குலத்தின் அடையாளம், அந்தஸ்து மற்றும் பாரம்பரியங்களுடன் இணைந்து இன்று வரை சாதியை அடையாளப்படுத்தும் வகையில் நாச்சிமார் கோயிலை அண்டிய பகுதியில் வாழும் தட்டார் சமூகத்தினர் காணப்படுகின்றனர். வரலாற்று ஆய்வுகளில் ஒரு நாட்டில் வாழ்கின்ற ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் நிலைத்திருத்தலில் மரபு ரீதியான பாரம்பரியத் தொழில்கள் பற்றிய வாசிப்புக்கள் கொண்டு வரப்பட்டுள்ள போதும் யாழ்ப்பாணத்தில் காணப்படும் நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி வாழும் தட்டார் சமூகம் பற்றியும் அவர்களது பாரம்பரிய உற்பத்தி முறைகள் பற்றியும் எதுவித எழுத்துக்களும் கொண்டுவரப்படவில்லை. இவ் இடைவெளியினை கண்டறிதலூடாக இலங்கையின் கலை வரலாற்றுப் பரப்பில் பாரம்பரியமாக நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி வாழும் தட்டார்கள் யாவர்? அவர்களது பண்பாடு, சமூகநிலவரங்கள், உற்பத்தி நிலவரங்கள், கைவினைஞர்கள், நகைகளின் வடிவமைப்பு பற்றிய விடயங்களை அச்சமூகத்தவர்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு வாசித்தலாக இவ்வாய்வு அமைகிறது.

**பிரதான சொற்கள்:** பாரம்பரியம், சாதிமுறைமை, தட்டார், விஸ்வகர்மா, பஞ்சகம்மாளர்

## ஆய்வின் அறிமுகம்

ஒரு சமூகத்தின் கலைவெளிப்பாடு அச்சமூகப் பண்பாட்டின் குறிகாட்டியாகவும் ஆக்கச் சுட்டியாகவும் அமைகின்றது. இதனடிப்படையிலே தொழில்களும் தீர்மானிக்கப்படுகின்றன. பண்டைய யாழ்ப்பாணத்தில் பலவகையான பாரம்பரியக் கைத்தொழில்கள் காணப்பட்டதுடன் அவை அம்மக்களது வாழ்வியலோடும் சமய பண்பாட்டு முறைகளினூடும் இணைந்து காணப்பட்டன. யாழ்ப்பாணச் சமூகம் தொடர்பாக அறியப்பட்ட வரலாறுகள் யாவும் சாதியினை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டும் வந்தன. யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் பாரம்பரியம் என்பவை கன்னார், கொல்லர், பொற்கொல்லர், குயவர், தச்சர் போன்ற பஞ்ச கம்மாளர்களை அடிப்படையாகக் கொண்டமைந்ததுடன் அவர்கள் தமது தொழிலுக்கேற்ப வாழ்விடங்களையும் அமைத்துக் கொண்டனர். யாழ்ப்பாண மக்களிடத்தே நகைகள் என்பது ஓர் சமூக அடையாளமாகவும் சடங்கு அவ்வகையே சார் நடைமுறைகளுடனும் தொடர்புபட்ட ஒன்றாக விளங்கியது. அத்துடன் அவை அப்பிரதேச மக்களது இன மத தொழில்முறை, சமய தத்துவம், பண்பாடு, பொருளாதாரம், சடங்குகள் மற்றும் கலைசார் நியமங்களாகவும் காணப்பட்டதெனலாம். அத்துடன் நகைத்தொழிலின் ஈடுபடல் என்பது குறிப்பிட்ட சாதி வகுப்பினரான தட்டார்களினாலேயே மேற்கொளள்ப்பட்டும் வந்தது.

[113] Department of Fine Arts, University of Jaffna, Sri Lanka.

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தின் கைவினை மரபினையும் தனித்துவத்தினையும், அணிகலன்கள் ஊடாகக் கண்டு கொள்ள முடியும். அத்துடன் அவ் அணிகலன்கள் மக்களின் வாழ்வியலுடன் இணைந்த ஒன்றாகவும் பாரம்பரிய பொக்கிமான பொருண்மையாகவும் யாழ்ப்பாண மக்களிடையே காணப்பட்டன. நகைகள் சார் உற்பத்திகள் கோயில்களை மையப்படுத்தியும், சடங்கு சார்ந்தும், சமூக அந்தஸ்து, செழிப்பின் பிரதிநிதித்துவமாகவும் விளங்கின. இவை பற்றிய வரலாற்று எழுத்தியல்களும் முக்கியம் பெறுகின்றன. அடையாளத்தின் பொருட்டு அணியப் பெற்ற செய்பொருள் வடிவமான அணிகலன்கள் இனமத பிரதேச தொழிலடிப்படையில் சமய தத்துவ பொருள் கொள்ளப்பட்டு ஓர் குழுக்குறியீடாக உருவாகிறது. இவை பிற்பட்ட சாதி அடுக்குள் தன்னை நியமித்தும் கொண்டது. பிற்காலத்தில் ஏற்பட்ட இனக்கலப்புக்கள் நவீனவருதல்கள் அணிகலன்களின் பாரம்பரியம், தனித்துவம், பண்பாட்டு ரீதியான முதன்மைகள் சமயத்துடனான தொடர்புகள் என்பவற்றினைக் கேள்விக்குள்ளாக்கின. ஆயினும் நவீன வருதல்கள் மற்றும் இயந்திரமயமாதல் போன்றவற்றினூடாக உற்பத்தி செய்யும் அணிகலன்களை விடவும் பாரம்பரியமாக பட்டறைகளில் உற்பத்தி செய்யும் போது அதன் நிலைப்பு பற்றியும், தனித்துவ அடையாளம் பற்றியும் முதன்மைப்படுத்தலை மொழிவதாக யாழ்ப்பாண நாச்சிமார் கோயிலை மையமாகக் கொண்ட தட்டார்களின் நகை வேலைப்பாருகள் காணப்பட்டன. இவற்றைப் பின்னணியாகக் கொண்டு இவ் ஆய்வு காணப்படுகின்றது.

### ஆய்வுப் பிரச்சினை

வரலாற்று ஆய்வுகளில் ஒரு நாட்டில் வாழ்கின்ற ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் நிலைத்திருத்தலில் மரபு ரீதியான பாரம்பரிய தொழில்கள் பற்றிய வாசிப்புக்கள் கொண்டு வரப்பட்டுள்ள போதும் யாழ்ப்பாணத்தில் காணப்படும் நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி வாழும் தட்டார் சமூகம் பற்றியும் அவர்களது பாரம்பரிய உற்பத்தி முறைகள் பற்றியும் எதுவித எழுத்துக்களும் கொண்டுவரப்படவில்லை. இலங்கையின் கலைவரலாற்றுப் பரப்பில் பாரம்பரியமாக நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி வாழும் தட்டார்கள் பற்றிய வாசிப்பைக் கொண்டு வருதலும் இவற்றுக்கான இடைவெளியை பூர்த்தி செய்தலுமாக இவ் ஆய்வு அமைகிறது.

### ஆய்வின் நோக்கம்

யாழ்ப்பாணத்தில் நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி வாழும் தட்டார்கள் யாவர், அவர்களது தனித்துவம் என்ன, யாழ்ப்பாணச் சமூக மாற்றமும் நவீன மயமாதலும் அவர்களது தொழிலமைப்பு முறைக்கு எவ்வாறு சவாலாகின என்பது தொடர்பான விடயங்களை அவர்களின் கைவினை, உற்பத்திசார் வடிவமைப்புக்களை மையப்படுத்தி வாசித்தலினூடாக இலங்கைக் கலைவரலாற்றின் யாழ்ப்பாண நகைகளின் கலைப் போக்குகளையும், வடிவமைப்பு ரீதியான தனித்துவத்தையும் கொண்டு வருதலே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

### முறையும் முறையியலும்

இலங்கையின் வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓர் சிறு பிராந்தியப்பகுதியான நாச்சிமார் கோயிலடி தட்டார் சமூகத்தை மையப்படுத்தி " யாழ்ப்பாணத்தின் சமூக மாற்றமும் நகைவேலைப்பாடுகளும்" என்ற தலைப்பில் மேற்கொளள்ப்படும் இவ் ஆய்வானது யாழ்ப்பாணத்தில் தட்டார்களின் வரலாற்றை அறிதலூடாக நாச்சிமார் கோயிலடி தட்டார்களின் நகை வேலைப்பாடு பற்றிய வாசித்தலினை மேற்கொள்ள சமூக, பண்பாட்டு மற்றும் பாணிரீதியான அணுகுமுறைகளிலூடாகவும்,கோட்பாடுகள் ஊடாகவும் இவ் ஆய்வினை அணுகியுள்ளேன்.

இன்று எழுதப்படும் வரலாறுகள் அதிகாரம் கொண்ட தமரால் அதிகாரத்தின் அடுத்த தலையினரான பிறர் பற்றிய வாசிப்பாக உள்ளது. ஆயினும் கலைவரலாறுகள் ஒவ்வொன்றும் தனியன்களாக இயங்குவதில்லை. அவை பண்பாடு இனம்,ஊடகம், சமூகம், கலை, சமயம், விதிமுறைகள்,பால்நிலை, சாதியமைப்பு, பொருளாதாரம், அரசியல், போன்ற பல்வேறு காரணிகளின் தாக்கங்களால் வடிவமைக்கப்படுகின்றன. அவ்வகையே இவ்வாய்வினை டி.ஜே

கிளார்க்கின் முறையியல் ஊடாக அணுகுகின்றேன். “எந்தவொரு வெளிப்பாடும் அதன் சமூகப்புலத்திலிருந்தே தோன்றுகிறது. இதனூடாக பண்பாட்டை புரிந்து கொள்ளுதல், சமூக நிலவரங்கள், உற்பத்தி நிலவரங்கள் மூலம் கலைப்படைப்பை அணுகுதல்” எனும் அடிப்படையில் நேர்க்காட்சி வாதத்திற்கு பிந்திய கோட்பாடான மாக்சியத்தை முன்னெடுத்துள்ளேன்.

தரவுகளை சேகரிக்கவும், வியாக்கியானப்படுத்தவும் பயன்படும் செயற்பாடு சார்ந்த படிமுறைகளும், அணுகுமுறைகளும், ஆய்வு முறை எனப்படுகின்றது. எனது ஆய்வானது கற்பனை முறையை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்படடுள்ளன. இதில் தரவு சேகரித்தல் என்பது முக்கியம் பெற்றன. எனது ஆய்விற்காக 02 வகையான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

- முதலாம் நிலைத் தரவு அவதானித்தல் - நாச்சிமார் கோயில் பகுதிக்கு சென்று அங்குள்ள நகை உற்பத்தி சார் விடயங்களை அவதானித்தல்
- கலந்துரையாடல் - நடராசா பத்தர், கோவிந்தராசா பத்தர், சரவணன் பத்தர், சற்குணம் பத்தர்,சாந்தகுமார்பத்தர், வைத்தியலிங்கம் பத்தர், இராசேந்திரம் பத்தர், நவநீதன் பத்தர், சண்முகம் பத்தர், மதனரூபன் பத்தர், கஜேந்திரன் பத்தர் ஆகியோருடன் கலந்துரையாடலினை மேற்கொண்டேன்.
- நேர்காணல் - நவநீதன் பத்தர், சற்குணம் பத்தர்,சாந்தமுமார் பத்தர், ஜெயகிருஸ்ணன் பத்தர்.
- இரண்டாம் நிலைத்தரவுகள் சஞ்சிகைகள், இலக்கியங்கள், நினைவு மலர்,கும்பாபிசேக வெளியீட்டுமலர் இணையதளம்

**கலந்துரையாடலும், கண்டுபிடிப்புக்களும்**

யாழ்ப்பாணத்தில் 1900களின் பின் நகை வேலைப்பாடுகளில் நாச்சிமார் கோயிலடி முக்கிய இடம் பெறுவதைக் காணலாம். சங்கத்தாணை, கொக்குவில் மேற்கு, நல்லூர் போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து தமக்கான ஓர் அமைவிடத்தை நிலைகொண்டு நகைத்தொழிலில் ஈடுபட்டவர்களாக நாச்சிமார் கோயிலடி தட்டார் காணப்படுகின்றனர். ஒருவகையில் இதற்குக் காரணமாக யாழ்ப்பாணத்தின் நகரமயமாதலும், நவீனமயமாதலும் அமைந்தது. யாழ்ப்பாணத்தின் மாநகர எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணை என்னும் பகுதியில் வடக்கில் காங்கேசன்துறை வீதியோடு இராமநாதன் வீதி இணையும் சந்தியிலே, நாச்சிமார் கோயில் என அழைக்கப்படுகின்ற வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோயிலினை மையப்படுத்தி தட்டார் தமக்கான குடியேற்றத்தை அமைத்து இப்பகுதியில் வாழ்ந்ததாகவும் அவர்களுக்கிடையேயான பரம்பரைரீதியான தொடர்ச்சி இன்றும் பேணப்படுவதாகவும் வாய்மொழித் தகவல்கள் கூறுகின்றன. அத்துடன் இப்பிராந்தியத்தில் குடியேறிய தட்டார்கள் தமது சாதியமைப்புடனும் தொழில்ரீதியான செயற்பாடுகளுடனும் வாழ்ந்ததாக ஆரியச் சக்கரவர்த்தி காலக் குறிப்புக்களிலும் “யாழ்ப்பாண வைபவமாலை” என்ற நூலின் எழுத்துக்களிலும் காணப்படுகின்றன.

மேலும் இவர்கள் யாழ்ப்பாணத்தின் பழங்குடிகள் என்றும் காலங்காலமாக ஆபரண உற்பத்தியை மேற்கொண்டவர்களாகவும் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர். ஆரம்பத்தில் இவர்களின் பரம்பரையினர் யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்ததாகவும் அவர்கள் தமக்கான தனித்துவ அடையாளத்தை நிலைநாட்ட நான்கு தலைமுறையினருக்கும் முன்பே இப்பகுதியில் குடியமர்ந்ததாகவும் கூறுகின்றனர். அத்துடன் இவர்கள் தமக்கான ஒரு தனி இடத்தினை ஆபரண உற்பத்தியில் நிலைபெறச் செய்ததுடன் ஆரம்பத்தில் இப்பகுதியினராலேயே யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் நகைகள் செய்து கொடுக்கப்பட்டதுடன் காலனிய ஆட்சியாளர்களுக்குமான வடிவமைப்புக்களும் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. சமயச் சடங்குகள், விஸ்வகர்ம குலத்தின் அடையாளம், பாரம்பரியங்களுடன் இணைந்து இன்றுவரை சாதியமைப்புடன் இயங்கும் ஓர் குழுவாக இச்சமூகத்தனர் காணப்படுகின்றனர். இவர்கள் பட்டறைகளை அடிப்படையாகக் கொண்டு இயந்திரங்களின்றிக் கைகளால் தமது உற்பத்திகளை மேற்கொள்வதுடன் செய்திறன், நேர்த்தி, வடிவமைப்பு, நுகர்வு என்ற ரீதியில் பரம்பரைக்கான நகை உற்பத்திகள், கோயில் நகை உற்பத்திகள், ஏனைய நகை உற்பத்திகள் என்ற பிரிப்புள் இன்றுவரை தொடர்ச்சியாக நகைவேலைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் ஏனைய சாதி வகுப்பினரிடமிருந்து தமக்கான சில தனியடையாளங்களையும் கொண்டிருந்தனர். அவற்றுள் பூணூல் போடுதல், அதிகார சமநிலையைப் பேணுதல், விக்கிரகங்களைத் தொடமுடிதல்,சடங்குகளில் முதன்மை பெறல் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். திருமணம் என்ற வகையில் இவர்களிடையே கலப்புத் திருமணம் என்பது ஆரம்பங்களில் இல்லை. தட்டார் சமூகத்தைச் சார்ந்தோரையே திருமணம் செய்தும் கொண்டனர். இவை ஆரம்பங்களில் வலுவானதாகப் பேணப்படினும் பிற்பட விஸ்வகர்ம குல வழியில் பிறந்தோரைத் திருமணம் செய்தலும் இவர்களிடையே இடம்பெற்றன. ஆயினும் அந்தஸ்து ரீதியாக பொற்கொல்லர்களையே திருமணம் செய்தல் உயர்வு எனவும் கருதினர். திருமணச்சடங்கு என்ற வகையில் இவர்களிடம் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. பொன்னுருக்குதல் என்ற ரீதியில் இவர்கள் அந்தஸ்து நிலையில் முக்கியம் பெற்றனர். இச்சடங்கு முறையானது, வேறு நபர்களால் மேற்கொள்ளப்பட இயலாத விடயமாகவும் பொற்கொல்லருக்கே உரிய சடங்காகவும் காணப்பட்டது. இதனால் இவர்களது அந்தஸ்து நிலை மேலும் வலுப்பெற்றது.

வடிவமைப்பில் மரபும் மாற்றமும் எனும் அடிப்படையில் நோக்கும் போது நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி வாழும் தட்டார் சமூகத்தினர் தம்மிடையே ஒரு பாரம்பரியப் பயில்வைக் கொண்டிருந்தனர். அவ்வகையே மூன்று குடும்பங்களின் தொடர்ச்சியாக இங்கு பயில்வு இடம்பெறுவதையும் காணலாம்.

01.க.சி.அப்புதுரை பத்தர் 1909 – 1979

02.தாமோதரம்பிள்ளை கிரு'ணசாமிப் பத்தர் 1920 – 1997

03.வேலுப்பிள்ளை கந்தசாமிப் பத்தர் 1929 – 2007

இவர்களின் பரம்பரைத் தொடர்ச்சி இன்று வரை தொழிற்பட்டு வருகின்றது. இவர்களது நகை வேலைப்பாடுகளில் காணப்படும் பரம்பரைக்கிடையிலான தனித்துவமும், காலத்தின் நகர்வும், நவீனத்தின் அறிமுகமும், வடிவமைப்பு என்ற ரீதியில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இதனடிப்படையிலே இம்மூன்று குடும்பங்களின் தொடர்ச்சியினுடைய நகை வேலைப்பாடுகளினை ஒப்பிடுதலூடாக வடிவமைப்பு, உத்திநுட்பம் ரீதியாக மரபும் மாற்றமும் எவ்வாறு இடம் பெற்றுகின்றது என்பதை அவதானிக்கலாம். மரபார்ந்த நகை வடிவமைப்புக்கள் என்ற ரீதியில் இப்பகுதியினரிடம் அதிகமாக அட்டியல், பதக்கம், சங்கிலி, ஒட்டியாணம், மோதிரம் போன்ற வடிவமைப்புக்களே முக்கியம் பெற்றன. அவற்றுள் “முறிச்சுக்குத்தி கொடி, உயர்கட்டு மோதிரம்,சங்கு முகக்காப்பு, கொம்புத் தாலி,அன்னப் பதக்கம்” தனித்துவமானவையாகவும் காணப்பட்டன. நாச்சிமார் கோயிலடி தட்டார்களிடையே ஆரம்ப காலங்களிலிருந்து இன்று வரை தாலி செய்தல் என்பதும் தொடரப்பட்டு வருகின்றது. அவையும் மரபிலிருந்து மாற்றத்தை வேண்டி நிற்கின்றன. இம்மாற்றம் நுகர்வோரினால் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாக மாறியது. யாழ்ப்பாணத்துத் தமிழர்களின் திருமணம் இந்து ஆகம மரபுச் சடங்குகளில் ஒன்று. இதற்காக தாலி செய்யப்படுவதுண்டு. சாதியமைப்பின் கோலங்களை சுட்டிக்காட்டுகின்ற அணிகலன்களில் வடிவங்களுள் தாலி பிரதான ஒன்றாக உள்ளது. சமூக அமைப்பு நிலைக்கேற்ப அவை வேறுபாட்டையும் கொண்டிருந்தன. ஆனால் காலத்தின் நவீன வளர்ச்சியும், கலாசார பண்பாட்டுக் கலப்பும் இதிலும் தன்னாதிக்கத்தை ஏற்படுத்தியது என்றே கூற வேண்டும். கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப் பரவலினை அடுத்து தாலி என்ற தனித்துவ அடையாளத்தின் மதக்குறியீடுகளும் உள்நுழைந்து அவர்களுக்கான சின்னங்களை ஆபரணங்களில் தீட்டுகின்ற ஒரு பண்பு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. கால ஓட்டமும் நவீனத்தின் துரித வளர்ச்சியும் தாலி வடிவமைப்புக்களிலும் செல்வாக்கினை ஏற்படுத்தத் தொடங்கின. குறிப்பாக, தாலிக் கொடியுடன் பதக்கம் போன்ற வடிவமொன்றும் புதிதாக இணைந்து கொண்டது.

இவ்வகை மாற்றங்களில் கல்வி ரீதியான அடையாளம், காலனிய செல்வாக்கு, கல்வி நிறுவனங்களின் எழுச்சி என்பன பெறும் செல்வாக்கை ஏற்படுத்தின. ஆரம்பங்களில் அறிவினை விருத்தி செய்யும்பொருட்டு ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின் உயர்கல்வி காலப் பகுதியுள் தந்தையிடமிருந்து குலத்தொழிலைக் கற்றுச் செயற்படும் குழுவினராக இவர்கள் காணப்பட்டனர். அதன் பின்னர் உயர்கல்வியைத் தொடர்தலும் காணப்பட்டது. இவ்வாறு இவர்கள் தமக்கான கல்விரீதியான சமூக அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டனர். இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் இலவசக் கல்வியின் அறிமுகம், அனைவரும் கல்வி கற்பதற்கான வாய்ப்பை வழங்கியது. இதனூடாக இப்பகுதியினரும் கல்விசார் நடவடிக்கைகளில் தம்மை இணைத்துக் கொண்டனர். குலத்தொழிலைக் கற்றுத் தொழிற்படல் என்பது மெல்ல அருகியது. இவ்வகை நடவடிக்கைகளின் தொடர்ச்சியில் 1950 களின்

பின்னான நவீனத்தின் வருகை, கைத்தொழில் புரட்சி என்பன இவர்களது குலத்தொழில் சார்ந்த நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கியது. இவர்களது பரம்பரையினர் நவீனத்தின் போக்கிற்கு அமைவாகத் தொழில் ரீதியாக அரச நிறுவனங்களை நாடுதல், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, உயர்கல்வி வசதிகள், ஏனைய சமூகத்தாருடன் தம்மை ஒப்பிடத் தொடங்குதல், பொருளாதார நிலைமாற்றம், யாழ்ப்பாணச் சமூகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் அதனோடு தொடர்புபட்ட செயற்பாடுகளும் குறிப்பாக (ஈழப்போர் ஒன்று 1983 – 1987, ஈழப்போர் இரண்டு 1989 – 1993, ஈழப்போர் மூன்று 1995 – 2002, ஈழப்போர் நான்கு 2002 களின் பின்னர் நடைபெற்ற யுத்தங்கள் இடப்பெயர்வுக்கு வழிவகுத்தன). இவர்களது தொழில்களையும் பாதித்தது என்றே கூற வேண்டும். யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிலும் காணப்படுவோர் தமது சொந்த இடங்களினை விட்டும் வெளியேறினர். இதன் பின்னணியில் அதிகமாக பொற்றொழிலாளர்களும் தமது இடத்தினையும், தொழிலையும் விட்டு வெளியேறத் தொடங்கியமை என்பது இத்தொழில் முறைமைகளும், வேலைப்பாடுகளும் நலிவடையக் காரணமாகின. 2009ஆம் ஆண்டளவில் அதிகமான பொற்கொல்லர்கள் இப்பிராந்தியங்களிலிருந்து வெளியேறினர். நவீன மயமாதல், இயந்திரங்களின் வருகை, நிறுவனரீதியான இடையீடு போன்ற காரணங்கள் சமூகத்தில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவர இவர்களுக்கான சந்தை வாய்ப்பின் இழப்பும், பட்டறைசார் செயற்பாடுகளும் அச்சுறுத்தலாக மாறின. இவ்வகை மாற்றங்கள் யாவும் சமூகப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டே எழுந்தன. இப்போக்குகள் பாரம்பரியப் பட்டறை சார்ந்த இவர்களது உற்பத்திக்குப் பாரிய சவாலாக மாறியது.

மேலும் இப்பகுதியினர் சந்தை வாய்ப்புக்கள் என்ற வகையில் தனிநபர் சார்ந்ததாகவும், கோயில் சார்ந்ததாகவும் காணப்படுகின்றது. கோயில் சார்ந்த உற்பத்தி என்பது பரம்பரையாகத் தொடரப்படுவதால் திருவிழாக் காலங்கள் மற்றும் விசேட தினங்களிலே உற்பத்தி சார்ந்த செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. இவை வருமானம் என்பதனை நோக்காகக் கொண்டது என்பதை விடவும் சமயம் சார்ந்த தமது அந்தஸ்தை சமூகத்தில் நிலைபெறச் செய்தல் தொடர்பான உற்பத்தி நடவடிக்கையாகக் காணப்படுகின்றது. தனிநபர் என்ற ரீதியில் இவர்களுக்கான சந்தை வாய்ப்பும் மிகக் குறைவானதாகவே உள்ளது. இன்றைய நவீனமயமாதல் இவர்களுக்குப் பெரும் சவாலாக அமைய அதற்கேற்ற வகையில் தம்மை வடிவமைத்துக் கொள்ளவும் முயற்சித்தனர்.

இச்சமூகத்தில் ஒருவகையில் மரபு பேணப்படுவதையும், மரபும் நவீனமும் இணைக்கப்படுவதையும் காணலாம். இந்த இணைப்பு முக்கியமானது. இது கலையின் பயில்வில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் நுகர்வோர் சந்தைக்கு பின் தொழிற்படும் கலைஞர்களாக மாறி நகைகளை ஒட்டுதல் சங்கிலி, மோதிரம் போன்ற சாதாரண நகைகளைச் செய்யும் தொழில் நிறுவனங்களுக்கான பத்தர்களாக மாறிச் செயற்பட ஆரம்பித்தனர். ஆயினும் பரம்பரையாக குறித்த பத்தரிடம் நகை செய்வோர் என்ற ரீதியில் ஒருபுறம் இவர்களுக்கான அடையாளம் நிலை பெற்றிருந்தது. சமூக மாற்றத்தின் போக்கு இவர்களது அலங்கார வடிவமைப்புக்களிலும் மாற்றத்தைக் கொண்டு வந்தன. குறிப்பாக பழைய நகை வடிவமைப்புக்களை நவீன தேவைகளுக்கு ஏற்ப சில மாறுதல்களுடன் வடிவமைத்தல் என்பனவும் கொண்டுவரப்பட்டது. நிறுவன ரீதியான போசிப்பு எனும் வகையில் இன்று யாழ்ப்பாணத்தில் பிரதான கடைகள் ஏற்றுமதித் தளங்கள் போன்றவற்றை நோக்கியதாகவும் இவா்களது நகா்வு காணப்படுகின்றது.

இவற்றோடு இன்றைய காலகட்டத்தில் பல்லூடகங்களின் வருகை என்பது இத்தொழிலுக்கு மிக முக்கிய சவாலாக மாறியது. தொலைக்காட்சிகளின் மூலம் பல்வேறு பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்ற முனைதல், அச்சு ஊடகங்களின் வருகையினால் ஏற்பட்ட பிரதி செய்தல், புத்தகங்களில் நகை வடிவமைப்புக்களை மேற்கொள்ளல், கணினியில் வடிவமைப்புக்களை மேற்கொள்ளல் என்பன இச்சமூகத்தவரிடையே புதிய மொழிவுகளாக மாறின. இச்செயற்பாடு நுகர்வோர் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த, போசிப்பாளா்களின் வேண்டுகைக்கு ஏற்ப உற்பத்தியாளா்கள் தமது பாரம்பரியமான பட்டறைகளின் தொடர்ச்சியில் அலங்காரங்களையும், உற்பத்திகளையும் மாற்றிக் கொண்டு செயற்பட ஆரம்பித்தனர். ஆயினும் இவர்களிடம் தமக்கான தனியடையாளம் பேணுதல் என்பது வலுவானதாகவே காணப்பட்டது. இவ்வாறான விடயங்களை அணுகுதல்மூலம் ஆரம்பங்களில் வாழ்ந்த சமூகம் எவ்வாறானது? அவர்களது பண்பாடு, பொருளாதாரம், அரசியல் நிலை எவ்வகையானது? இன்றைய நவீன கால கட்டத்தில் மரபும் பாரம்பரியமும் அன்று போல் பேணப்படுகின்றதா? போன்ற வினாக்களுக்கு விடை காண்பதாகவும், இச்சமூகத்தினரின் வடிவமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தை வாசித்தலாக மரபும் மாற்றமும் எவ்வாறு நகை உற்பத்தியில் செல்வாக்கு செலுத்துகிறது என்பதையும் அறிய முடிகிறது.

**முடிவுரை**

பாரம்பரியக் கலைமரபுகள் கால ஓட்டத்தினால் மறைந்து செல்கின்றன. அத்துடன் மரபுகளுக்கான பயில்வுகள் நவீனத்தின் வருகைக்கு பின்னர் தம்மை மாற்றிக் கொள்கின்றன என்றே கூறவேண்டும். இவ்வாறான சமூகமாற்றங்களை இத்தட்டார் சமூகத்தார் எவ்வாறு தமக்கானதாக தகவமைத்தக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்பதையும் இவ் ஆய்வு திரைவிலக்குகிறது. அவ்வகையே நாச்சிமார் கோயிலடி தட்டார்களின் வடிமைப்புக்களை வாசித்தலூடாக அவர்களது தனித்துவத்தையும் தற்காலத்தின் தேவைக்கும் கேள்விக்கும் ஏற்ப வடிவமைப்பு ரீதியாகவும், சமூக ரீதியாகவும்,பண்பாட்டு ரீதியாகவும் வரும் மாற்றத்தையும் வெளிப்படுத்துவதாக ஆபரணங்கள் காணப்படுகின்றன. பரம்பரைத் தொடர்ச்சி என்பது வடிவமைப்புக்களுடன் மரபும் மாற்றம் என்ற வகையில் பயணித்தாலும் பரம்பரையின் முறிவு என்பது இன்று இவர்களிடையே பெரும் சவாலாக மாறியுள்ளது. இந்நிலையை நோக்கும் போது யாழ்ப்பாணத்தின் கலைவரலாற்றை வாசிக்கும் போது நகைகள் பற்றிய எழுத்துக்களில் இவர்களுக்கான அடையாளம் கொண்டு வரப்படும் போது மரபும் பேணப்படலாம். இவ்வகை வேண்டுதல்களை அணுகியதாக இவ் ஆய்வு காணப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**

Arnold wright,(1999) Twentieth century impression of Ceylon, New Delhi : Asian educational services.

Casteless or Caste blind,(2009) Colombo : Kumaran book house.

CoomarasuwamyAnanda.K,(1956) Mediaeval Sinhalese Art, New York.

JayadevaTilakasiri,(1994) Handicrafts of Sri Lanka of all ages, Colombo : Airkenspence printing.

Philatethes,(2003) History of Ceylon Earliest period to the year 1815, Asian : Educational service.

RagupathyPonnampalam,(1987)Early settlements in Jaffna, Madras : SudarsanGraphice.

Ragawan, Jaffna Architecture magazine

waltersilva. D.P Handicrafts, former Director of education

Dalits of Sri Lanka caste Blind does not mean casteless International Dalits solidarity network

கணபதி ஸதபதி.வை, (1978) சிற்பச் செந்நூல் தொழில் நுட்பக் கல்வி இயக்கம், அச்சு தொழில் பயிலகம்.

கந்தையா ஆச்சாரியார்(1973) இ.சி,தமிழர் மணமும் தாலியும், யாழ்ப்பாணம் தெல்லிப்பளை, பதிப்பகம்.

கிருஸ்ணராசா. செ, (1999)நங்கையரியன் அணிகலன்கள் கோண்டாவில் : பிறை நிலாபதிப்பகம்.

கிருஷ்ணராசா.ரா,(1979) கலையும் சமுதாய வாழ்க்கையும், கொழும்பு : முன்னேற்ற பதிப்பகம்.

சண்முகலிங்கம்,என்,(2000), சமூக மாற்றத்தில் பண்பாடு, யாழ்ப்பாணம் : சவுத்விசன் வெளியீடு.

சண்முகதாஸ் மனோன்மணி, யாழ்ப்பாண மொழியும் வாழ்வும், யாழ்ப்பாணம் : கோகுலன் வெளியீடு

சபாநாதன்,குல,(1949), யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணம் : பொன்னையா பதிப்பகம்.
சிவத்தம்பி கார்த்திகேசு, (2000),யாழ்ப்பாணம் சமூகம் பண்பாடு கருத்துநிலை, கொழும்பு குமரன் அச்சகம்.

சிற்றம்பலம் சி.க.(2003) யாழ்ப்பாண தொன்மை வரலாறு, யாழ்ப்பாணம் : மஹாத்மா அச்சகம்.

நவரத்தினம்.க,(1954) இலங்கையின் கலை வளர்ச்சி கொழும்பு : குமரன் பதிப்பகம்.

பக்தவத்சலபாரதி,(1912) பண்பாட்டு மானிடவியல் கொழும்பு : சேமமடு பதிப்பகம்.

வெங்கட்சாமிநாதன்.சி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

ஜெயராசா.சபா, யாழ்ப்பாண கலைமரபில் கலையும் ஓவியமும்